**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கால்நடை பராமரிப்புத் துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.ரா.மோகன்குமார், த/பெ. சீ. ராஜேந்திரன் (லேட்) – இளநிலை உதவியாளராக பணி நியமனம் – விதித்தளர்வு செய்து பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப–7) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2053, சுபகிருது மார்கழி மாதம் 22–ம் நாள்

அரசாணை (டி) எண்.17

நாள் 06.01.2023

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கடித ந.க.எண். 84856/ஆர்3/2008, நாள் 04.10.2021 (ம) 16.8.2022.

------

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கடிதத்தில் காஞ்சிபுரம் மண்டலம், மதுராந்தகம் கோட்டம், கப்பிவாக்கம் கால்நடை மருந்தகத்தில் கால்நடை பராமரிப்பு உதவியாளராக பணியிலிருக்கும்போது 26.02.2007 அன்று மறைந்த திரு.சீ.ராஜேந்திரன் என்பவரது மகன் திரு.ரா.மோகன்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் சென்னை, கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, 29.01.2020 பிற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் மேலும் பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் மனைவி அவரது மூத்த மகன் திரு. ரா. இளங்கோ கணேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 10.09.2008 நாளிட்ட விண்ணப்பத்தின் வழி அரசு ஊழியர் மறைந்த மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பித்த பின்னர், அவ்விண்ணப்பதாரருக்கு (ரா. இளங்கோ கணேஷ்) மனநலம் சரியில்லாமல் போனதால் அவருக்கு பதிலாக இளைய மகன் திரு.ரா.மோகன் குமார் என்பவருக்கு வழங்கிடக் கோரிய 19.07.2010 நாளிட்ட மாற்று விண்ணப்பம் அரசு ஊழியர் மறைந்த மூன்றாண்டுகளுக்குள் பெறப்படவில்லை என்பதால், இதனை சிறப்பு நிகழ்வாக கருதி உரிய அனுமதியினை வழங்குமாறு அரசிடம் கோரப்பட்டதில், தனியரின் கல்வித் தகுதியின் அடிப்படையில்

பணி நியமனம் வழங்க அரசாணை (நிலை) எண்.120, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 26.06.1995 மற்றும் அரசு கடிதம் (நிலை) எண்.202, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 08.10.2007 ஆகியவற்றிற்கு விலக்களித்து பணிநியமனம் வழங்குவதற்கு அரசின் அனுமதி பெறப்பட்டதன் அடிப்படையில் தனியருக்கு இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டது என்றும் மேற்படி தனியரின் ஆவணங்கள்/சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில் கருணை அடிப்படையில் பணி நியமனத்திற்குரிய ஏனைய நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ள போதிலும், பணிநியமனம் கோரிய மாற்று விண்ணப்பமானது அரசுப் பணியாளர் மரணமடைந்து மூன்றாண்டுகள் கடந்த நிலையில் அளிக்கப்பட்டுள்ளதால், இது அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020–க்கு முரணானதாகும் என்பதாலும், மேலும் தனியருக்கு பணப்பலன்கள் நியமன நாள் முதல் வழங்க ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2) என்ற விதி மற்றும் மேற்படி அரசாணைக்கு விலக்கு அளித்து, தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 29.01.2020 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.ரா.மோகன்குமார் என்பவரின் பணியினை தனியர் பணியில் சேர்ந்த நாளான 29.01.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20(6)(b) (காலம் கடந்த விண்ணப்பம்) மற்றும் பணப்பலன்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் வழங்க ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2)) ஆகியவற்றை தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–ல், பிரிவு 58–ன் கீழ் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி தளர்வு செய்து அரசு ஆணையிடுகிறது.

3. கால்நடை பராமரிப்புத் துறையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ரா.மோகன்குமார், த/பெ. சீ. ராஜேந்திரன் (லேட்) என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 29.01.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால் இதனை நியமன அலுவலருக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்வதுடன், இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவுசெய்யுவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதியத் தொகை ஏதும் நிலுவை இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியடையவராகிறார். மேலும் தனியரின் அசல் ஆவணங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் பணிக்கப்படுகிறது.

4. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.கு.எண். 18733/க்யூ.1/2022-1 நாள் 28.12.2022 மற்றும் மனிதவள மேலாண்மை துறையின் அ.சா.கு. எண். 3832716/ஜி1/2022 நாள் 02.01.2023 பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35.
திரு. ரா. மோகன்குமார், இளநிலை உதவியாளர்
(ஆணையர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35. வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-18/18(பெயரில்)
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.
நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம் - மீனவர்நலம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு /உதிரிப்படிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

6.1.23
பிரிவு அலுவலர்